விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 099 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 14 திங்கட்கிழமை (28.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## அரசிலிருந்து மேலும் 10 பேர் விலகல்?

### கொழும்பு ஊடகம் தகவல்
### சபையில் தனித்து இயங்கத் தீர்மானம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்கு ஆதரவு நாளாந்தம் சரிந்துவரும் நிலையில் மேலும் 10 ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் உடனடியாக எதிரணியில் இணையாமல் இவர்கள் பாராளுமன்றத்தில் சுயாதீன அணியாகச் செயற்படக்கூடும் என அறியமுடிகின்றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணப் பண்பாட்டு மையம் இன்று திறப்பு

### மகிந்த - ஜெய்சங்கர் இணைந்து இணையவழி ஊடாக திறந்து வைப்பர்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பண்பாட்டுமையத்தினை இலங்கைப் 15

### யாழ். கோண்டாவிலில்

## பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு புகுந்து தாக்குதல்

### நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியதில் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தினர் நால்வர் படு 15

### கூட்டமைப்புடனான பேச்சின்மூலம்

## தமிழர்களின் மனதை ஜனாதிபதி வெல்வார்

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்



(கொழும்பு)

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சமரசப் பேச்சை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தொடர்ந்து முன்னெடுப்பார். இந்தப் பேச்சுகள் மூலம் தமிழ் மக்களின் மனதை ஜனாதிபதி வெல்வார்" என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வந்தடைந்தார் சுப்ரமணியம் ஜெய்சங்கர்

### கூட்டமைப்புடனும் கலந்துரையாடுவார்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் நேற்று இரவு இலங்கை வந்தடைந்தார்.

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்துள்ள சுப்ரமணியம் ஜெய்சங்கர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என இந்திய 15

## மின்சாரப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குக

### பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

மின்சாரப் பிரச்சினைக்கு உடனடியான தீர்வினை வழங்கி, பொதுமக்களுக்கு தொடர்ச்சியான மின் விநியோகத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று 15

## அரசு செல்லும் நிலையை பார்த்தால் வெகுவிரைவில் வடக்கு, கிழக்கில் மக்களின் அடையாளம் இல்லாமல்போகும்

### நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் எச்சரிக்கை



(மட்டக்களப்பு)

தற்போது அரசாங்கம் செல்லும் நிலையைப் பார்த்தால் வெகுவிரைவிலே வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அடையாளம் இல்லாமல் போய்விடும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பல இடங்களிலும் அந்த அடையாளங் 15

## அரசாங்கத்தை வீழ்த்த சந்திரிகா வியூகம்

### இரகசியப் பேச்சுகள் இடம்பெறுகின்றன

(கொழும்பு)

2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து, பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாளர் ஈடுபட்டுள்ளார் என தகவல் கசிந்துள் [illegible] 15

### தேரர் ஒருவரின் வழிகாட்டலின்கீழ்

## ராஜபக்ச அரசுக்கு எதிராக வலுவடையும் எதிர்ப்பு கூட்டணி

(கொழும்பு)

அரசாங்கத்துடன் அதிருப்தியில் இருக்கும் அமைச்சர்கள் [illegible] உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகி தனியான அமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 3,500 மெற்றிக்தொன் எரிவாயுக் கப்பல்

## இலங்கை வந்தடைந்தது

(கொழும்பு)

ஓமானின் கடனுதவியுடன் 3,500 மெற்றிக்தொன் எரிவாயு ஏற்றி வந்த கப்பல் நேற்றிரவு இலங் கையை வந்தடைந்ததாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு இறக்கும் பணி நேற்று பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மூடப்படும் கெரவலப்பிட்டிய லிட்ரோ காஸ் நிலையம்வழமைபோன்று நேற்று இயங்கியதாகவும் தெரிவித்துள்ளது. (ம)

# சிலாபம் கடலில் மூழ்கி குடும்பஸ்தர் இருவர் பலி

(கொழும்பு)

விருந்து ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற ஒன்பது பேர் கடலுக்கு குளிக்கச் சென்றபோது, அவர்களில் இரண்டு பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் சிலாபம் - மெவத்தை பகுதியில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா மாவட்டம் நானுஓயாவைச் சேர்ந்த மருதை ராமசாமி மற்றும் விஸ்வநாதன் ஆகியோரே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் தும்மல சூரிய கைத்தொழில் பேட்டையில் இருந்து மெவத்தை பகுதிக்கு விருந்துக்கு சென்றுள்ளனர் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம)


**வீடு வாடகைக்கு தேவை**

கச்சேரி/ நல்லூர்/ அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை. (10812)

**077 839 5849**


# இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன் தினேஷ் குணவர்த்தன சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிச்சங்கிற்கும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவுக்கும் இலங்கை பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான தொடர்பு மற்றும் மொழி கற்கைகளுக்கான வாய்ப்புகள் என்பன குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது கல்வி வாய்ப்புக்களை மேம்படுத்துவதன் ஊடாக உயர்கல்வித்துறைக்கு மேலும் நன்மைகளை பெற்றுக் கொள்வது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பயணங்களை முகநூலில் பதிவிடாதீர்

## பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் தாம் பயணங்களை முன்னெடுக்கும் போது, அது தொடர்பிலான புகைப்படங்கள், குறிப்புக்களை முகப்புத்தகம் வாயிலாக பகிர்வதை தவிர்க்குமாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு இன்னும் 3 வாரங்களே எஞ்சியுள்ள நிலையில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மூலம் பெரும்பாலும் பதிவாகும் திருட்டுக்கள், வழிப்பறிக் கொள்ளைகள், வாகன உதிரிப்பாக திருட்டுக்கள் தொடர்பில் பொதுமக்கள் மிக அவதானமாக நடந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறிப்பாக பண்டிகைக் காலத்தில் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட வாகனங்களில் பயணிக்கும் மக்கள் தமது வாகனங்களை பாதுகாப்பான இடத்தில் தரித்து வைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அசையும் சொத்துக்களை அணிந்த வண்ணமும் சுமந்த வண்ணமும் பயணிப்போர், தம்மை சுற்றி நடப்பவை தொடர்பில் விழிப்பாக இருக்குமாறும் வழிப்பறி மற்றும் திருட்டு சம்பவங்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தை, அவ்வாறு விழிப்பாக இருப்பதன் ஊடாக தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் அஜித் ரோஹண சுட்டிக்காட்டினார்.

அதேவேளை பண்டிகைக் காலத்தில், தாம் பயணங்களை முன்னெடுக்கும்போது, அது தொடர்பிலான புகைப்படங்கள், குறிப்புக்களை முகப்புத்தகம் வாயிலாக பகிர்வதை தவிர்க்குமாறும், அவ்வாறு பகிர்வதன் ஊடாக வீடுடைத்து திருடும் சம்பவங்கள் உள்ளிட்ட திருட்டுக்கள் பதிவாகலாம் எனவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண பொதுமக்களை எச்சரித்துள்ளார். (ம)




# ஓராண்டு நினைவஞ்சலி

## இராசநாயகம் நித்தியானந்தம்

ஆண்டொன்று ஓடி மறைந்ததுவே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஆருயிர் அப்பாவைப் போல் வருமா?
ஊர் போற்றும் உத்தமராய்
செல்வாக்கு மிக்கவராய்
சென்ற இடம் சிறப்பித்து
வாயாரப் புன்னகைத்து
வாஞ்சையுடன் வரவேற்று
வந்தோரை உபசரித்து
வாழ்வாங்கு வாழ்ந்த அப்பா இன்று
மௌனமாய் மாயமானார்

தகவல்: **மனைவி, பிள்ளைகள்**
**திக்கம், பருத்தித்துறை.**

(C-1069)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு எதிராக நாமும் வீதியில் இறங்க நேரிடும்

## முருத்தெட்டுவே தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

**அரசாங்கம் முறையாக செயற்படாவிடின் அரசாங்கத்திற்கு எதிராக நாமும் வீதிக்கிறங்க நேரிடும். எதிர்வரும் 31 ஆம் திகதி மகாசங்கத்தினரை ஒன்றிணைத்து உறுதியான தீர்மானத்தை அறிவிப்போம் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**

அபயராம விகாரையில் சனிக்கிழமை நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், சிறந்த நோக்கத்திற்காக ஆட்சி மாற்றத்தில் முன்னின்று செயற்பட்டோம்.

அரசாங்கத்தை விமர்சிக்காதவர்கள் உள்ளவர் வீட்டில் இருந்து ஒரு குவளை தண்ணீர் பெற்றுக் கொள்வது தற்போது ஆச்சரியமாகவுள்ளது அந்தளவிற்கு முழு நாட்டு மக்களும் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது நாட்டு மக்கள் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண பிரதமர் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ மீது மக்கள் மத்தியில் நல்ல நிலைப்பாடு கிடையாது. அவரை 6 மாத காலத்திற்கு அமைச்சு பதவியில் இருந்து விலக்கி வைக்குமாறு ஏற்கெனவே வலியுறுத்தினோம். ஒன்று அவரை பதவி நீக்க வேண்டும். அல்லது அவருக்கு பிறிதொரு அமைச்சு பதவியினை வழங்க வேண்டும் என தெரிவித்தார். (4)



## தடுப்பூசி அட்டை

### கட்டாயமாக்கப்படும் இடங்கள் விபரம் விரைவில்!

(கொழும்பு)

ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் பூரணமாக தடுப்பூசி செலுத்திக் கொண்டமைக்கான அத்தாட்சி அட்டை கட்டாயமாக வைத்திருக்க வேண்டிய பொது இடங்களின் பட்டியல் விரைவில் அறிவிக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக அடுத்த 2 வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு தொற்று நோய் பிரிவின் பிரதம தொற்று நோய் நிபுணர் மருத்துவர் சமித்த கினிகே தெரிவித்தார். (4)

# BIMSTEC மாநாடு கொழும்பில் இன்று

(கொழும்பு)

5 ஆவது BIMSTEC மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன் முயற்சி எனப்படும் BIMSTEC மாநாடு நாளை மறுதினம் வரை நடைபெறவுள்ளது.

30 ஆம் திகதி BIMSTEC மாநாட்டிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை தாங்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகளும் வெளிவிவகார அமைச்சர்களும் நாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

மியன்மாரின் வெளி விவகார அமைச்சர் இந்த மாநாட்டில் இணைய வழியாக பங்கேற்கவுள்ளார்.

இந்த மாநாட்டின் போது BIMSTEC சாசனம் ஏற்கப்பட்டு, பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (4)

## தமிழகம் தருமை ஆதீனத்தால்

# யாழைச் சேர்ந்த நால்வருக்கு 'கௌரவ கலாநிதி' விருது



(சென்னை)

திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வர சுவாமி மகாகும்பாபிஷேகப் பெருவிழாவில், தமிழகம் தருமை ஆதீனம் நட்சத்திர குருமணி கள் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதானத்தால் நேற்று நான்கு இலங்கை ஆளுமைகளுக்கு கௌரவ கலாநிதி விருது வழ ங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் "சிவாகம கலாநிதி" விருது யாழ்ப்பாணம் நயினாதீவு சிவஸ்ரீ. ஐ. கை. வாமதேவ சிவாச்சாரியாருக்கும் "திருமுறைக் கலாநிதி" விருது ஓய்வு பெற்ற யாழ்ப்பாணப் பல்கலக்கழகப் பேராசிரியர். நா.வி.மு. நவரத்தினம் ஓதுவாருக்கும் "பல்கலை வித்தகக் கலாநிதி" விருது மறவன்புலவு க.சச்சிதா னந்தத்திற்கும் "நாதஸ்வரக் கலாநிதி" விருது ஈழ நல்லூர் பாலமுருகன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டன. (4-6-104)

# மின் தடை சீராகும் வரை கட்டணம் அதிகரிக்காது

## அமைச்சரவையில் ஆராய்வு

(கொழும்பு)

மின் தடை சீராகும்வரை உத்தேச மின்சார கட்டணத்தை அதிகரிக்காதிருப்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தொடர்ந்தும் விநியோகத்தை முன்னெடுத்து செல்வதற்கு உற்பத்தி செலவினங்களுக்கு ஏற்றவகையில் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய, அமைச்சரவையினால் மின்சார சபையிடம் இருந்து மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை கோரப்பட்டிருந்தது.

இதன்படி, குறித்த யோசனை தற்போது அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது. (4)

## மசகு எண்ணெய் விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் கடுமையாக உயர்ந்துள்ளது.

ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் எரிவாயு மீது மேற்கத் தேய நாடுகள் விதித்த தடை மற்றும் சவூதி அரேபியாவில் உள்ள எண்ணெய்க் கிடங்கு மீதான தாக்குதல் என்பவற்றினால் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி, பிரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை முறையே 120 டொலர்களாக உயர்ந்துள்ள அதேவேளை WTI மசகு எண்ணெய் விலை 114 டொலராக உயர்வடைந்துள்ளது. (4)

# ரணிலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

(கொழும்பு)


கடந்த அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு குழு மற்றும் செயலகம் என்பன குறித்து விசாரணை செய்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக 12 விடயங்களை கொண்ட குற்றப்பத்திரிகையினை முன்வைத்துள்ளது.

அதில் மூன்று குற்றச்சாட்டுகள் தேசிய நிறைவேற்றுக்குழு, ஊழல் ஒழிப்புக் குழு மற்றும் ஊழல் ஒழிப்பு செயலகம் என்பன உருவாக்கப்பட்டமை தொடர்பில் சுமத்தப்பட்டுள்ளன.

குறித்த மூன்று குழுக்களை நிறைவேற்றுவதற்கு ஒத்தாசை வழங்கியமையின் ஊடாக முன்னாள் பிரதமர் அரசியலமைப்பை மீறியுள்ளதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பு சம்பியன் சென்னைக்கு பதிலடி கொடுத்தது கொல்கத்தா



ஐ.பி.எல் தொடரின் 14 ஆவது அத்தியாயத்தை கடந்த வருடம் முடித்து வைத்த சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகிய அணிகள் இந்த வருடம் ஆரம்பித்து வைத்த 15 ஆவது அத்தியாயத்தில் பதிலடி கொடுத்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 6 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

இதன் மூலம் கடந்த வருட இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியிடம் அடைந்த தோல்வியை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் நிவர்த்தி செய்துகொண்டது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பாக பந்துவீசி நடப்பு சம்பியன்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 131 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தினர்.

தொடர்ந்து அஜின்கியா ரஹானே, அணித் தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர் ஆகியோரின் துடுப்பாட்டங்கள் கொல்கத்தாவின் வெற்றியை இலகுபடுத்தின.

ஆரம்பப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ரவிந்திர ஜடேஜா தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 131 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

சென்னை சுப்பர் கிங்ஸ் ஆரம்ப வீரர்களை குறைந்த எண்ணிக்கைக்கு இழந்தது. முன்னாள் அணித் தலைவர் எம்.எஸ்.தோனி, புதிய அணித் தலைவர் ஜடோஜா ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 6 ஆவது விக்கெட்டில் 70 ஓட்டங்களைப் பகிர்ந்திராவிட்டால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நிலை மோசமடைந்திருக்கும்.



தோனி 38 பந்துகளில் 7 பவுண்ட்றிகள், ஒரு சிக்ஸ்டன் 50 ஓட்டங்களுடனும் ஜடேஜா 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இவர்கள் இருவரை விட றொபின் உத்தப்பா 28 ஓட்டங்களைப் பெற்றார்.

கொல்கத்தா பந்துவீச்சில் உமேஷ் யாதவ் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா 18.3 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 133 ஓட்டங்களைப்பெற்று வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் முன்வரிசை வீரர்கள் அனைவரும் அதிகபட்ச பங்களிப்பை வழங்கி கொல்கத்தாவின் வெற்றியை உறுதிசெய்தனர்.

அஜின்கியா ரஹானே (44), வெங்கடேஷ் ஐயர் (16) ஆகிய இருவரும் பவர் ப்ளேயில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்து நல்ல ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

தொடர்ந்து நிட்டிஷ் ரானா (21), ஷ்ரேயாஸ் ஐயர் (20 ஆ.இ.), சாம் பில்லிங்ஸ் (25) ஆகியோர் துடுப்பாட்டத்தில் அதிகபட்ச பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

சென்னை பந்து வீச்சில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றிய ட்வேன் ப்ராவோ, ஐ.பி.எல் தொடரில் 170 விக்கெட்களைப் பூர்த்தி செய்தார்.

இதன் மூலம் இண்டியன் பிறீமியர் லீக்கில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய லசித் மாலிங்கவின சாதனையை ப்ராவோ சமன் செய்தார். (4)




**சுதா**

நல்ல வேலை போன் ல பேட்டரி வச்சானுங்க



போனுக்கும் பெட்ரோல் போடுற மாரி இருந்தா நம்ம நிலைமை என்ன ஆயிருக்கும்.

**உதயம்**

தன்னை "சிங்கிள்" என்று சொல்லிக் கொண்டு நடந்தவனை....



காலம் அவனை "அங்கிள்" என்று அழைக்க வைத்து விட்டது....

**கஜன்**

நீங்க சைவமா? அசைவமா?



பொதுவா சைவம் பக்கத்து வீட்டு கோழி எங்கவீட்டு பக்கம் வந்தா மட்டும் அசைவம்...

**கண்ணகி**


வெயில் கால பரிதாபங்கள்.....




வேகமா சுத்தி தொலைடா பரதேசி!! பரதேசி!!

**அனுசன்**

எல்லா மிருகங்களையும் கூண்டிற்குள் அடைத்த மனிதன்....



கொசுவிற்கு பயந்து வலைக்குள் புகுந்து கொண்டான்......

**கயல்**

உலகம் அழகாக மாறுவது அழகிய தோற்றம் கொண்ட மனிதர்களால் அல்ல, அழகிய குணம் படைத்த மனிதர்களால்.........



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியம் அற்ற விமான சேவைகள் நிறுத்தம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு விமான வசதிகள் வழங்குவதை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என விமானப்படை பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி மற்றும் கொரோனா நிலைமையினால் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அத்தியாவசிய தேவைக்காக, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மாத்திரமே விமான சேவைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



தற்போதுள்ள எண்ணெய் கையிருப்பு. அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் முகாமைத்துவம் செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4)



அமெரிக்காவில் இயங்கி வரும் உலகத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளைப் பாராட்டி மேற்படி ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு சமூக சேவைக்கான வாழ்நாள் சேவையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. குறித்த விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் அமைந்துள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது. (படம்- ரவிசாந்)

# கொலைச் சந்தேக நபர் கைது

(கொழும்பு)

கெஸ்பேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்மானவத்தை வீதி, மாவித்தர பிரதேசத்தில் நபரொருவரை பொல்லால் தாக்கி கொலைசெய்தமை தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பொரல்லஸ்கமுவ பிரதேசத்தில் கல்கிசை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் குறித்தநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பொரல்லஸ்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதான இளைஞரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபரிடமிருந்து மோட்டார்சைக்கிளொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (4)


## பணியாளர்கள் தேவை

எமது கல்வி நிறுவனம் கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது!

* வகுப்பு மேற்பார்வையாளர் ஆண்/ பெண்
* கணனிப் பதிவாளர் ஆண்/ பெண்
* சிற்றுண்டிச்சாலை ஊழியர் ஆண்/ பெண்

03.04.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கவும். (84070)

New Science world.
(Navalar Road,
Brown Road Junction Jaffna)
021 221 6690
077 336 4055
077 336 4030


# மரண அறிவித்தல்

சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்- சிவபுராணம் 19-20

## திருமதி. சரஸ்வதி கிருஷ்ணன்

மண்ணில் 16 . 11 . 1925



விண்ணில் 25 . 03 . 2022

சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சரஸ்வதி கிருஷ்ணன் அவர்கள் (25.03.2022) வெள்ளிக்கிழமை 96 வயதில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கிருஷ்ணன் (பிரதம தபாலதிபர், குப்பிழான்-சிங்கப்பூர் நல்லுறவு மன்ற ஸ்தாபகர்) அவர்களின் அன்பு மனைவியும் சத்தியதாசன், காலஞ்சென்ற யோகதாசன், ஜெயதாசன், கண்ணன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், Martine Moal, கலாவதி, செல்வமலர் ,காலஞ்சென்ற Emmeline Payne ஆகியோரின் மாமியும் ஷாமலா, சாந்தினி, பவானி, Elizabeth Maya ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரது இறுதிக்கிரிகைகள் 37, Namly Drive, Singapore,267451)இல் உள்ள அவரது இல்லத்தில் 27.03.2022 நேற்று நடைபெற்று Mandai Crematorium Hall-1 ல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

(10809)

குப்பிழான்,
ஏழாலை

தகவல்
குப்பிழான்- சிங்கப்பூர் கிருஷ்ணன்- நல்லுறவு மன்றம்
077949 6985

# இராசிபலன்

28.03.2022
பங்குனி 14, திங்கட்கிழமை
ஏகாதசி பிற்பகல் 4.52 மணிவரை

திருவோணம் பிற்பகல் 12.55மணிவரை
சுபநேரம் -12.14-1.44 மணிவரை
இராகுகாலம் -7.44-9.14 மணிவரை

ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்,சந்திராஷ்டமம்- திருவாதிரை,புனர்பூசம்

வளவன்

**மேஷம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் ,புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு இடம் பெறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.

**மகரம்** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல்கள் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** தடைப்பட்ட காரியங்களில்முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவிவந்த மனஸ்தாபங்கள் அகலும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** உறவினர், நண்பர்கள் தொடர்பான விவகாரங்களில் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கன்னி** மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள்.

**தனுசு** செய் தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**மீனம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] அறிகுறி

# போக்குவரத்துத் திணைக்களத்தின் நடமாடும் சேவை- கைதடியில்

(யாழ்ப்பாணம்)


மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் "வீதி ஒழுங்குகளை பேணி பாதுகாப்பாக பயணிப்போம்" எனும் தொனிப்பொருளிலான் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது என வடமாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திருமதி.சுஜிவா சிவதாஸ் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆகியோரின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இந் நடமாடும் சேவைகள் எதிர்வரும் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணசபை வளாக கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளன.

இந் நடமாடும் சேவையில், வாகன உடமை மாற்றங்கள், வாகன பதிவுப்புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், வாகனத்தின் நிறைச்சான்றிதழை பெறல், வாகன உடமை மாற்ற படிவங்களை கையேற்றல், சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் மாற்றம் தொடர்பான விடயங்கள், சாரதி அனுமதி பத்திரத்துக்கான மருத்துவ பரிசோதனை, வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளல் என்பன இடம்பெறவுள்ளன.

இவ் ஊடக சந்திப்பின்போது வடமாகாண மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் இ.சிவகரன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் ஆகியோரும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள நிர்வாக ஆணையாளர் சுசந்த ஐயதிலக, மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் சஞ்சீவனி மற்றும் காஞ்சனா பொன்சேகா ஆகியோர் பங்கேற்றனர். (5-6-18-33)




## மின்சார வெட்டில் ஏன் பாரபட்சம்

இன்றைய நாட்களில் மின்வெட்டு வழமையாகிவிட்டது.

கிட்டத்தட்ட இலங்கை முழுவதும் மின்வெட்டு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்றது.

ஆயினும் பிரதான நகரங்களின் முக்கிய பகுதிகளுக்கு 24 மணிநேரமும் மின் விநியோகிக்கப்படுகின்றது.

இந்த வகையில் யாழ்ப்பாணத்திலும் நகர மையப் பகுதி.போதனா மருத்துவமனைப் பிரதேசம், பல்கலைக் கழகப் பிரதேசம்.மாவட்ட செயலகப்பகுதி போன்ற பகுதிகளுக்கு தொடர்ச்சியாக மின் விநியோகிப்படுவது பாராட்டுதலுக்குரியது.

ஆயினும் சில சாதாரண (முக்கிய நிறுவனங்கள் ஏதுமற்ற) பிரதேசங்களுக்கும் 24 மணி நேர மின்விநியோகம் வழங்கப்படுகின்றமை ஆச்சரியத்திற்குரியது.

நாட்டின் பலபகுதிகள் பல மணிநேரமாக இருளில் மூழ்கிக்கிடக்க கேந்திர முக்கியத்துமற்ற மேற்படி பிரதேசங்கள் 24 மணி நேர மின் விநியோக வரப்பிரசாதத்தை எவ்வாறு பெற்றன.

அவ்வாறாயின் இவை மின்சாரசபையின் செல்வாக்குள்ள பிரதேசங்களா என்ற ஐயம் எழுகின்றது.

மேலும் இப்பிரதேசங்களில் குறைந்தளவு நேரமாவது மின்வெட்டு அமுல்படுத்தப்படின் ஏனைய பிரதேசங்களின் மின்வெட்டு நேரத்தை குறைக்க முடியும்.

மின்வெட்டு அட்டவணை மட்டுமே தேசிய ரீதியில் தீர்மானிக்கப்படுகின்றதே தவிர உள்ளடக்கப்படும் பிதேசங்களை தீர்மானிப்பது குறித்த பிரதேச மின்சார உபநிலையங்களே.

எனவே அதிகாரிகள் மேலிடத்தை சாட்டி தப்பித்துக் கொள்ளாமல் அனைவருக்கும் பாரபட்சமற்ற மின்விநியோகத்தை வழங்க முன்வரவேண்டும்.

பூமி புத்திரன்
யாழ்ப்பாணம்

# அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிகள் கைது



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் சுற்று வளைப்பு மேற்கொண்டனர்.

முள்ளி பகுதியில் மேற்கொளப்பட்ட இச்சுற்றி வளைப்பில் அனுமதி பத்திரங்கள் சரியான முறையில் பயன்படுத்தாமல் அனுமதி இல்லாத பகுதிக்கு மணல் ஏற்றிச் சென்ற 3 டிப்பர் வாகனங்களை கைப்பற்றினார். அத்துடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதுவதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டனர். (5-6-60)

## துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா

(குப்பிழான்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும்-3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்-3.30 மணிக்கு துர்க்காதேவி ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்னபூரணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.


மேற்படி விழாவில் கொழும்பு தேசிய மருத்துவமனையின் விசேட நரம்பியல் நிபுணர் மருத்துவர். திருநாவுக்கரசு திவாகரன் மற்றும் கொழும்பு திருக்குடும்ப கன்னியர்மட முன்னாள் ஆசிரியை திருமதி. பிரமிளா திவாகரன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியை. திருமதி.சண்முகயோகினி ரவீந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (5-6-18)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் பத்தொன்பது தினங்கள் இடம்பெறும் இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறு நாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறவுள்ளன. (5-6-18)



"கல்விக்கு கரம் கொடுப்போம், பெண் தலைமைத்துவத்தை ஊக்குவிப்போம்" எனும் தொனிப்பொருளில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடிப் பிரதேசத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறப்பினர் க.வி.விக்கினேஸ்வரனும் கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனும் கலந்து கொண்டனர். (படம்:- கஜிந்தன்)

## வீடு புகுந்து தாக்குதல் மானிப்பாயில் சம்பவம்

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, சுதுமலை தெற்கு, இரும்புக்காரன் வீதியைச் சேர்ந்த ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர், அவரது வீட்டுக்குள் உள் நுழைந்து இவ்வாறு தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-6-104)

## போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை 520 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி மதுவரி பொறுப்பதிகாரி ராஜ்மோகனின் வழிநடத்தலில் மதுவரிப் பரிசோதகர் ரசிகரன் தலைமையிலான குழுவினர் அல்லாரைப் பகுதியில் இக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

அல்லாரை தெற்கைச் சேர்ந்த 25 வயதான சந்தேக நபர் ஒருவரை இவ்வாறு கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் நீதவான் குறித்த நபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (5-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMF அறிக்கை தொடர்பில் விவாதம் கோரும் ரணில்

(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதிய அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் உடனடியாக விவாதம் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

குறித்த அறிக்கை தொடர்பில் தற்போதைய அரசாங்கம் தனது திட்டத்தை முன்வைப்பது மிகவும் முக்கியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.


இதேவேளை, சர்வதேச நாணய நிதிய அறிக்கையின் சில பரிந்துரைகளை, இலங்கை ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அத்துடன், பொதுமக்கள், வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நேரடியாக பிரதிபலன் கிடைப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்துடன் நெருங்கி செயற்படத் தயார் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (4)



## வரட்சியான காலநிலையால்

# நீர்த்தேக்கங்களில் மூழ்கி இருந்த சிதிலங்கள் மீண்டும் தோற்றம்



(கொழும்பு)

மலையகத்தில் தற்போது நிலவி வரும் வரட்சியான காலநிலையினால், நீர்த்தேக்கங்களில் மூழ்கி கிடந்த பல கட்டடங்களின் அடையாளங்கள், ஆலயங்கள், தீவுகள் ஆகியன மீண்டும் தோற்றம் பெற்றுள்ளன.

இந்த வரட்சி மின்சாரத்திற்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்ப டுத்தினாலும், குறித்த இடங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா விரும்பிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. (4)

## 55 வருடங்களின் பின்

# இரத்மலானை விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமான சேவை

(கொழும்பு)

55 வருட இடைவெளிக்குப் பின்னர் கொழும்பு - இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமான சேவை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

மாலைதீவு ஏர் நிறுவனத்தின் Q2944 விமானம் நேற்று முன்தினம் காலை இரத்மலானை விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இரத்மலானை சர்வதேச விமான நிலையம் 1938 இல் திறக்கப்பட்டது. 1968 இல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இரத்மலானையில் இருந்து சர்வதேச விமான சேவைகள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# உச்சம் தொட்ட தங்கம்

(கொழும்பு)

உக்ரைன் போர் மற்றும் எரிசக்தி நெருக்கடி காரணமாக உலக சந்தையில் தங்கத்தின் விலை உயர்ந்து வருகிறது.

அதன்படி ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை தற்போது 1,958 அமெரிக்க டொலர்களாக உள்ளது.

வார இறுதியில் தங்கத்தின் விலையில் சிறிது சரிவு இருந்தாலும் கடந்த 30 நாட்களில் தங்கத்தின் விலை சுமார் 3 சதவீதம் அதாவது 56 டொலரினால் உயர்ந்துள்ளது.

இதேவேளை கடந்த ஒரு வருடத்தினுள் தங்க விலையின் அதிகரிப்பு 13 சதவீதம் அதாவது 230 டொலராக பதிவாகியுள்ளது.

இதேவேளை கொழும்பு செட்டியார் தெருவில் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 180,000 ரூபாவாக அதிகரித்துள்ளது. 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 160,000 ரூபாவாகும். (4)

## மின்வெட்டு

# குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்படும் உணவுகள் பழுதடையும் நிலை

(கொழும்பு)

நாட்டில் தற்போது அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற மின்வெட்டினால் குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்படுகின்ற உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அவதானமாக செயற்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது தொடர்ச்சியாக சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக விற்பனை நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டிகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பழுதடைந்த பொருட்களை பொது மக்களுக்கு விற்பனை செய்த 407 விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4)

# 132 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ள போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 132 பேருக்கு எதிராக இன்டர்போல் ஊடாக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் தற்போது துபாயில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

மேலும், கடந்த ஆண்டு போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 95 ஆயிரம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4)

# சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்பட குழு நியமிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதற்காக சர்வதேச சட்ட நிறுவனம் ஒன்றை தெரிவு செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இந்த குழுவில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நீதியமைச்சர் அலி சப்றி, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன் அந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அடுத்த மாத நடுப்பகுதியில் அமெரிக்காவின் வோஷிங்டன் நகருக்கு விஜயம் செய்ய உள்ளார். (4)

# இலங்கையில் இருந்து இந்தியா வருவோருக்கு உதவிகள்

## செல்வம் எம்.பி

(நெளுக்குளம்)

இலங்கையில் இருந்து இந்தியா வரும் அகதிகளுக்கு உதவுமாறு தமிழக முதலமைச்சரிடம் செல்வம் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாகவே மக்களுடைய தொழில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பிள்ளைகளுக்கு [illegible] யான முறையில் [illegible] கொடுக்க முடியவில்லை. அவ்வாறான ஒரு பிரச்சினை இலங்கை நாட்டிலே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே இலங்கையில் பட்டினியால் இறப்பதை விட இந்தியா செல்வது சட்ட விரோத செயற்பாடாக இருந்தாலும் கூட, அவ்வாறான ஒரு செயற்பாட்டை மக்கள் செய்வது அந்த காரணங்களை வைத்து கொண்டுதான். [illegible] இந்திய அரசாங்கம் [illegible] முகாம்களில் விட்டிருப்பதாக அறிகின்றேன். அந்தவகையில் முதலமைச்சருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

இலங்கையில் வாழமுடியாதென்று இந்தியா வரும் உறவுகளை நீதிமன்றத்தினை அணுக வைத்து சிறப்பு முகாம்களில் அடைக்காது, மக்கள் தங்கியிருக்கின்ற முகாம்களில் தங்க வைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் முதலமைச்சரிடம் முன்வைக்கின்றேன் எனத் தெரிவித்தார். (4-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# உக்ரைன்- ரஷ்

# அமைதி பேச்சுவார்த்



## உக்ரைன்

(கீவ்)

**ரஷ்ய- உக்ரைன் இடையே அ**
**உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்**

ரஷ்யாவின் கடுமையான தாக்குதலுக் உக்ரைன் பதிலடி கொடுத்து வருகிறது ரஷ்யாவுக்கு இந்தப் போர் பல்லாயிரக்கண கான வீரர்களை களப்பலியாக கொடுத் ள்ளது.

உக்ரைன் போரில் ரஷ்யா கிட்டத்தட்ட இலட்சம் வீரர்களை களமிறக்கி உள்ளது

---

## முகநூல் தரிசனம் 05

# வாழும் காதல்...





பிரியதர்ஷினி ரீச்சர் வேலை செய்யும்
பொழுது ஒரு லோகோ பைலட்டை
காதலித்தார்.
மங்களூர்- சென்னை
வழித்தடத்தில் ரீச்சரின் காதலர்
ரயில் ஓட்டினார்.
தலச்சேரி ஸ்டேஷனில் ரெயின் நிற்கும்பொழுது
இருவரும் சந்தித்து பேசிக் கொள்வார்கள்.
மொபைல் போன்கள் மிகவும் அரிதாக
இருந்த அந்தக் காலத்தில் இவர்களின்
காதல் அப்படி வளர்ந்தது.
ரீச்சர் மிக அழகாக இருப்பார்.
ஒரு நாள் ரீச்சர் காதலித்த ரயில் ரைவர் ரயில்
விபத்தில் உயிரிழந்தார்.
இந்த விஷயத்தை செய்தித்தாள்கள் மூலமாக
தெரிந்துகொண்ட ரீச்சருக்கு மனநிலை
பாதித்தது.
நிறைய சிகிச்சை அளித்தும்
அவரின் நோய் மாறவில்லை.

வீட்டை விட்டு தன்னிச்சையாக இறங்கி
தெருக்களில் நடக்க ஆரம்பித்தார்.
அவரது காதலர் பணியாற்றிய ரயில்
தினசரி தலைச்சேரி ரயில்
நிலையத்துக்கு வந்ததும் அதன்
என்ஜினில் ரைவர் ஆசனத்தையே
பார்த்துக் கொண்டிருப்பார்.
ரயில் புறப்பட்டுச் சென்றதும் ரயில்வே
ஸ்டேஷனை விட்டு வெளியேறி விடுவார்.

இது தினசரி தொடர்கிறது...
இன்று தலச்சேரியின் தெருக்களில்
இந்த வேடத்தில் பிரியதர்ஷினி ரீச்சர்
உலா வருவதைப் பார்க்கும் போது
காதலுக்கு ஒரு அர்த்தம் இருப்பதாகத்
தோன்றுகிறது.

---

# திரையரங்கு மீது தாக்குதல் 300 பேர் உயிரிழப்பு

## உக்ரைன் அரசு தகவல்



(கீவ்)

உக்ரைன்- ரஷ்யா போர் ஒரு மாதத்தை கடந்துவிட்ட நிலையில், மரியுபோலுள்ள திரையரங்கில் ஏராளமானோர் தங்கியிருந்தபோது நடத்தப்பட்ட ரஷ்ய தாக்குதலில் 300 பேர் கொல்லப்பட்டதாக உக்ரைன் அரசு அறிவித்துள்ளது.

மரியுபோலிலுள்ள திரையரங்கு ஒன்றில் நூற்றுக் கணக்கானோர் தங்கியிருந்த நிலையில், மார்ச் 16ஆம் திகதி ரஷ்ய படைகள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

இந்நிலையில், திரையரங்கு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 300 பேர் கொல்லப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் கூறியிருப்பதாக உக்ரைன் அரசு டெலிகிராமில் தெரிவித்துள்ளது.

திரையரங்கின் இரண்டு பக்கங்களிலும் குழந்தைகள் என்று ரஷ்ய மொழியில் எழுதப்பட்டிருந்த நிலையில், அதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அப்போது குற்றம் சாட்டப்பட்டிருந்த நிலையில், தற்போது பலி எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

---

# சொந்தப்படையினரின் தாக்குதலில் ரஷ்ய படைத்தளபதி பலி

(மொஸ்கோ)

உக்ரைனில் 7-வது ரஷ்ய படைத்தளபதி கொல்லப்பட்டுள்ளார். அவரை சொந்தப் படையினரே தீர்த்துக்கட்டியதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போர் 1 மாதத்தை கடந்து நீடித்து வருகிறது. இந்த போர்க்களத்தில் ரஷ்யா ஏற்கனவே 6 தளபதிகளை பறிகொடுத்துள்ளது. இந்த நிலையில் 7-வது தளபதி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

அவர் லெப்டினன்ட் ஜெனரல் யாகோவ் ரெசான் ட்சேவ் (வயது 48). இவர் 49-



வது கூட்டுப்படையின் தளபதி ஆவார்.

உக்ரைனுக்கு ரஷ்யாவால் 20 படைத்தளபதிகள் அனுப்பப்பட்டதில் 7 பேர் கொல்லப்பட்டுவிட்டனர். 13 பேர் மட்டுமே எஞ்சி உள்ளனர். இது ரஷ்யாவுக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

கொல்லப்பட்ட 7-வது தளபதி யாகோவ் ரெசான்ட்சேவ், ரஷ்ய துருப்புகளிடையே மன உறுதி குறைந்ததால் முன் வரிசையில் நின்று போரிடும் சூழலுக்கு தள்ளப்பட்டு, அதில் அவர் கெர்சன் பிராந்தியத்தில் உள்ள சொர்னோபைவ்கா விமான தளத்தில் உக்ரைன் படைகளால் கொல்லப்பட்டுள்ளார் என்று ஒரு தகவல் கூறுகிறது.

ஆனால் மற்றொரு தகவல், அவர் தனது சொந்தப்படையினராலேயே கொல்லப்பட்டுள்ளதாக கூறுகிறது. இந்த தகவலை 'தி நேஷனல்' (அபுதாபி ஆங்கில நாளிதழ்) கூறுகிறது. இது மேலும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ஷ்யா இடையே
# ந்தை தொடர வேண்டும்

## ரைன் ஜனாதிபதி வேண்டுகோள்

**யே அமைதிப் பேச்சுவார்த்தை தொடரப்பட வேண்டும் என ஒன்ஸ்கி மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

க்குதலுக்கு
வருகிறது.
யிரக்கணக்
கொடுத்து

ட்டத்தட்ட 2
உள்ளது.

அவர்களில் 15 ஆயிரம் பேர் வரையில் இந்தப் போரில் கொல்லப்பட்டுள்ளனர் என உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ரஷ்யாவிடம் அமைதி பேச்சுவார்த்தையை தொடர வேண்டும் என மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக, தொலைக்காட்சியில் உரையாற்றிய அவர் , அமைதிப் பேச்சுவார்த்தையை தொடர வேண்டும். அதே சமயம், அமைதிக்காக உக்ரைன் தனது எந்த ஒரு பகுதியையும் விட்டுக் கொடுக்க ஒப்புக்கொள்ளாது என உறுதிபட தெரிவித்தார். (4)

# அதி நவீன ஏவுகணை சோதனை வீடியோ வெளியிட்ட வடகொரியா



(பியாங்யாங்)

வடகொரியா கடந்த 2017-ம் ஆண்டுக்கு பிறகு நாட்டின் மிகப்பெரிய மற்றும் நீண்ட தூரம் செல்லும் அதிநவீன ஏவுகணையை கடந்த 24 ஆம் திகதி சோதித்தது. அமெரிக்கா வரை சென்று தாக்கும் வல்லமை படைத்த 'ஹவாசோங் 17' என்கிற இந்த ஏவுகணை அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் மேற்பார்வையில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கை உலக நாடுகளை அதிர்ச்சியடைய செய்துள்ள நிலையில், ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதை ஹாலிவுட் பட பாணியில் வீடியோவாக வடகொரிய இராணுவம் வெளியிட்டுள்ளது.

வீடியோவில் கிம் ஜாங் உன் கறுப்பு நிற உடை மற்றும் கறுப்பு நிற கண்ணாடியை அணிந்து நடந்துவர, அவருக்கு பின்னால் பிரமாண்ட ஏவுகணை ராணுவ வாகனத்தில் எடுத்து வரப்படுகிறது. பின்னர் கிம் ஜாங் உன் தனது கைக்கடிகாரத்தை பார்த்து, கவுண்டன் சொல்கிறார். அதை தொடர்ந்து ஏவுகணை நெருப்பை கக்கியப்படி விண்ணை நோக்கி சீறிப்பாய்கிறது.

ஏவுகணை சோதனை வெற்றியடைந்த பிறகு கிம் ஜாங் உன் இராணுவ வீரர்களுக்கு மத்தியில் சிரித்தபடியே நடந்து வருவதுபோல் வீடியோ முடிகிறது. இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# விபத்தில் சிக்கிய விமானத்தில் பயணித்த 132 பேரும் பலி

## சீன அரசு அறிவிப்பு

(பீஜிங்)

சீனாவின் ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் 737 ரக விமானம் அந்நாட்டின் குன் மிங் நகரில் இருந்து வுஜோ நகருக்கு கடந்த 21-ம் திகதி சென்றபோது விபத்தில் சிக்கியது. அதில் 123 பயணிகள், 9 ஊழியர்கள் உட்பட மொத்தம் 132 பேர் இருந்த தாக சீன விமான போக்குவரத்துத்துறை தெரிவித்தது.

குவாங்சி மாகாணத்தில் உள்ள மலைப்பகுதி மேல் 31 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக விமானம் கீழே விழுந்து நொறுங்கியது. இதனால் ஏற்பட்ட தீ அப்பகுதியில் பரவியது.

தகவலறிந்து அங்கு விரைந்து வந்த தீயணைப்பு படையினரும், மீட்புக் குழுவினரும் போராடி தீயை அணைத்தனர். அங்கு கிடந்த இடிபாடுகளுக்குள் விமான பாகங்களை கண்டறியும் முயற்சியில் மீட்புக் குழு ஈடுபட்டது.

இதற்கிடையே, விமான விபத்தில் யாரும் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை. விமானத்திற்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளதால் விபத்துக்கான காரணத்தை கண்டறிவது கடினமாக இருக்கும் என சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், விமான விபத்தில் பயணித்த 132 பேரும் உயிரிழந்துள்ளனர் என சீன அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. மேலும், உயிரிழந்த 120 பேரின் டி.என்.ஏ. அடையாளம் கண்டறியப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது. (4)

# வடகொரியா மீது அமெரிக்கா கூடுதல் பொருளாதாரத் தடை

(வோஷிங்டன்)

புதிய கண்டம், விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை கண்டிக்கும் வகையில், வடகொரியா மீது அமெரிக்கா கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

வட கொரியாவின் ஏவுகணைத் திட்டத்துக்குத் தேவையான மூலப்பொருள்களை வழங்கிய 5 நிறுவனங்கள், தனிநபர்கள் மீது இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், வடகொரியாவின் ஏவுகணை சோதனை குறித்து அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் லோய்ட் ஆஸ்டின், ஜப்பான், தென் கொரியா நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்களுடன் தொலைபேசி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார். 3 நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு அவர்கள் உறுதியேற்றனர். (4)

# ஹைப்பர்சொனிக் ஏவுகணை மூலம் உக்ரைனின் அணு ஆயுத கிடங்கை அழித்தது ரஷ்யப் படை



(கீவ்)

அதி நவீன ஹைப்பர்சொனிக் ஏவுகணையை செலுத்தி, மேற்கு உக்ரைனில் பூமிக்கு அடியில் இருக்கும் மிகப்பெரிய ஆயுத கிடங்கை அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கின்செல் பாலிஸ்டிக் ஏவுகணை எனப்படும் இந்த ஏவுகணைகளை ஒரு போரில் ரஷ்யா பயன்படுத்துவது இதுவே முதல் முறை.

இந்த ஏவுகணைகள் மிக்-31 ரக போர் விமானங்கள் மூலம் ஏவப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

'கின்செல்' எனப்படும் இந்த ஹைப்பர்சொனிக் ஏவுகணை மணிக்கு 6,000 கிலோமீற்றர் வேகத்தில் 2,000 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கும் திறன் கொண்டது.

ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகமான ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் 8 மீற்றர் நீளம் கொண்டவை மற்றும் போர் தந்திர திறன் கொண்டவை.

இலக்கை துல்லியமாக தாக்கவும், எதிரிகளின் கண்ணில் படாதவாறு மறைந்து கொள்ளவும், ஏவுகணைகள் காற்றில் தன் இயக்கத்தை கட்டுப்படுத்துவது என பல அம்சங்கள் இந்த ஏவுகணைகளின் சிறப்பம்சமாக பார்க்கப்படுகின்றது. (4)

# சவுதியின் எண்ணை சேமிப்பு கிடங்கு மீது தாக்குதல்

(ரியாத்)

சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் உள்ள எண்ணெய் கிடங்கு மற்றும் ரியாத்தில் உள்ள பிற எண்ணெய் நிலையங்களை குறிவைத்து ஏமனின் ஹௌதி கிளர்ச்சியாளர்கள் ரொக்கெட் மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆளில்லா விமானத்தின் ஊடாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், இந்த தாக்குதலின் போது எவ்வித உயிரிழப்பும் பதிவாகவில்லை.

இந்த எண்ணெய் சேமிப்பு நிலையத்தில் டீசல், கேசோலின், ஜெட் விமான எரிபொருள் ஆகியவை சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் தொடர்பாக சவுதி அரேபியா வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கிளர்ச்சியாளர்கள் நகரில் உள்ள தண்ணீர் தொட்டியை குறிவைத்தே தாக்குதலை நடத்தியுள்ளனர். ஆனால், தாக்குதலில் சில வீடுகளும், வாகனங்களும் சேதமடைந்தன. மற்றொரு தாக்குதல், ஏமன் எல்லைக்கு அருகே சவுதி அரேபியாவின் தென்மேற்கு பகுதியில் துணைமின் நிலையத்தை குறிவைத்து நடத்தப்பட்டுள்ளது என தெரிவிக் கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண ஆரம்பப் பிரிவு மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. (5-100-316)

## வெங்காய வெடியை உட்கொண்டதால்
# அவதியுறும் யானைக்குட்டி

(நெளுக்குளம்)

வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் பப்பாசி தோட்டத்திற்குள் நுழைந்த யானைக்குட்டி ஒன்று மீண்டும் காட்டிற்கு செல்ல முடியாத நிலையில் தவித்து வருகின்றது.

குறித்த தோட்டத்திற்குள் நுழைந்த 6 வயது மதிக்கத்தக்க யானைக் குட்டி உணவருந்த முடியாத நிலையில், தோட்டத்தில் இருந்து வெளியே செல்ல முடியாத நிலையில் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து பிரதேசவாசிகளால் வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து கால்நடை வைத்தியர் கிரிதரன் தலைமை யிலான குழுவினர் யானைக்குட்டி வெங்காய வெடியினை உட்கொண்டதனாலேயே உணவருந்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்ததோடு, யானைக் குட்டிக்கான சிகிச்சையையும் மேற்கொண்டனர். (5-6-299)

# தொடரும் மணல் அகழ்வால் பாதிப்படையும் விவசாய நிலங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ்வுகளுக்கான எந்தவிதமான அனுமதிகளும் வழங்கப்படாத நிலையில் முரசுமோட்டை, மருதங்குளம், உப்பாறு, ஊரியான், பழைய கோரக்கன் கட்டு, ஐயன் கோவிலடி, பெரிய குளம் ஆகிய பகுதிகளில் இருந்து நாளாந்தம் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு தொடரும்மணல்கொள்ளையால் பெருமளவான விவசாய நிலங்கள் நீர்ப்பாசன கால்வாய்கள் நீர் விநியோக வாய்க்கால்கள் என்பன கடும் பாதிப்படைகின்றன.

எந்தவிதமான அனுமதியும் வழங்கப்படாத நிலையில் இவ்வாறு சட்ட விரோதமாக மணல் கொண்டு செல்லப்படுகின்ற போதும் பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையே காணப்படுகிறது.

இச் செயற்பாடுகள் தொடர்பாக காணி உரிமையாளர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.(5-6-315)

# கட்டுப்பாட்டையிழந்த பிக்கப் கடைக்குள் புகுந்தது



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பளை நகரப் பகுதியில் நேற்று முன் தினம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் ரக வாகனம் ஒன்று கடைத் தொகுதியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் கடைத் தொகுதியின் ஒரு பகுதி சேதமடைந்து இவ் விபத்தில் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என தெரி வித்ததுடன் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (5-316)

# இந்திய மீனவர்கள் வேலை நிறுத்தம் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு



(மன்னார்)

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்யக் கோரி இந்திய மீனவர்களின் குடும்பத்தினர் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இராமேஸ்வரம் பேருந்து நிலையம் முன்பாக இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதியை சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மீனவர்களின் வேலை நிறுத்தம் காரணமாக 1200 இற்கும் மேற்பட்ட படகுகள் மீன்பிடித் துறைமுகங்களில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. இந்த வேலைநிறுத்தம் காரணமாக இந்த மீன்பிடித் தொழிலைச் சார்ந்த சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேலை மற்றும் வருவாயை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய மாநில அரசுகள் மீனவரின் மீது அக்கறை கொண்டு உடனடியாக அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி மீனவர்களின் வாழ்வாதாரத்தை காக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளை சேர்ந்த 16 மீனவர்களை கைதுசெய்ததோடு, அவர்களது 2 மீன்பிடி விசைப்படகுகளையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (6-5-285)

# அடிப்படை வசதிகளின்றி அல்லல்படும் தட்டுவன் கொட்டி மக்கள்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள தட்டுவன் கொட்டி பிரதேசத்தில் 117 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் போக்குவரத்து வசதியின்மை மற்றும் அடிப்படை வசதிகள் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிராமத்தில் உள்ள பாடசாலை தரம் 11 வரையான வகுப்புகளை மாத்திரம் கொண்டிருந்த போதும் ஏனைய மாணவர்கள் உயர் கல்விக்காக பரந்தன் மற்றும் கிளிநொச்சி பாடசாலை செல்ல வேண்டிய நிலை காணப்படுவதோடு ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கும் 20 கிலோமீற்றர் கடந்து கிளிநொச்சி பரந்தன் ஆகிய இடங்களுக்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் கடந்த 2014 ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தினால் அம் மக்களின் மருத்துவத் தேவைக்காக முச்சக்கரவண்டி ஒன்று வழங்கப்பட்டிருந்தது குறித்த முச்சக்கர வண்டி பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் இதனை திருத்தி பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என்றும் அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(5-6-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 200 | 150 | 220 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 300 | 400 |
| தக்காளி | 80 | 60 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 80 |
| கோவா | 80 | 60 | 100 | 100 |
| கரட் | 140 | 250 | 200 | 250 |
| பூசணி | 50 | 70 | 100 | 80 |
| புடோல் | 150 | 100 | 140 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 160 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 150 |
| பீற்றூட் | 120 | 120 | 140 | 120 |
| கறிமிளகாய் | 300 | 200 | 300 | 240 |
| முருங்கைக்காய் | 1400 | 1300 | 1200 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 100 | 200 |
| கீரை – 1 பிடி | 100 | 60 | 50 | 80 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 150 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 160 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | -- | 80 | -- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 21.03.2022-07.10.2023

## ஏழில் வருகிறது ராகு இல்லத்தில் செலவு கூடும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**(சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள் வரை)**

**பெயரின் முதல் எழுத்துக்கள்: ர, ரு, ரே, த, தி, து, தே உள்ளவர்களுக்கும்**

**துலாம் இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், 7ஆம் இடம் எனப்படும் களத்திர ஸ்தானத்தில் மார்ச் 21 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். அதே சமயம் கேது பகவான் உங்கள் ஜென்ம இராசிக்கு வரப்போகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அதே இடத்தில் சஞ்சரித்து, அங்குள்ள நட்சத்திரப் பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

**களத்திர ஸ்தான ராகு, ஜென்ம இராசியில் கேது**

உங்கள் இராசிக்கு 7ஆம் இடமான சப்தம ஸ்தானத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கப்போகிறார். இதனை 'களத்திர ஸ்தானம்' என்பார்கள். திருமண வயதடைந்த ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் இக்காலத்தில் திருமணப் பேச்சுக்கள் வரத்தொடங்கும். 'ராகுவைப் போல கொடுப்பானுமில்லை' என்பதால், நிறைய வரன்கள் வந்து அலைமோதும். இருப்பினும் பொருத்தம் பார்த்து திருமணம் செய்து கொண்டால்தான் வருத்தமில்லாத வாழ்க்கை அமையும்.

ஜென்மத்தில் கேது சஞ்சரிப்பதால் சிந்தனை ஆற்றல் அதிகரிக்கும். உறவினர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். சமூகப் பற்று மிக்க உங்களுக்குப் பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். அடிக்கடி உடல்நலக் குறைபாடு ஏற்பட்டு உற்சாகத்தை குறைக்கும். கவனம் தேவை. சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வதன் மூலம் சகஜ நிலைக்கு வரலாம்.

**சூரிய சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)**

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார நிலை உயரும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டில் இருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வரலாம். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். முன்கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுங்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். மிதமிஞ்சிய பொருளாதாரமும், தொழிலில் புதிய ஒப்பந்தங்களும் வந்துசேரும்.

**சுக்கிரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம்(23.5.2022 முதல் 28.1.2023 வரை)**

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, இராசிநாதன் சுக்கிரனாக இருப்பதால் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இடையூறு சக்திகள் அகலும். பணவரவில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும். அலைச்சலைக் குறைத்துக் கொள்வதன் மூலமும், நேரம் கடந்து உணவருந்துவதை தவிர்ப்பதன் மூல மும் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்ளலாம். தங்கம், வெள்ளி போன்ற ஆபரண சேர்க்கை உண்டு. தன்னிச்சையாக செயற்பட்டு சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். திருமணம் போன்ற சுபகாரியங்கள் முடிவாகும். செல்வ வளம் மிக்க ஒருவரின் உதவி தக்க சமயத்தில் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள்.

**கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம்(29.1.2023 முதல் 7.10.2023 வரை)**

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் அமைதி குறையலாம். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள். உத்தியோக மாற்றங்களும், ஊர் மாற்றங்களும் எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். பணத்தேவை அதிகரிக்கும். ஒருசிலருக்கு நீண்ட தூரத்திற்கு சென்று பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும். முன்னோரின் சொத்துக்களை விற்பதில் சில தடைகள் அகலும். முகஸ்துதி பாடி காரியம் சாதிப்பவர்களை இனம் கண்டு கொள்வது நல்லது. அரசியலில் ஈடுபட்டிருப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாகலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**குரு சாரத்தில் கேது சஞ்சாரம்(21.3.2022 முதல் 25.9.2022 வரை)**

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். ஒருசிலருக்கு ஊர் மாற்றங்கள் ஏற்படலாம். நண்பர்களை நம்பி செய்த ஒருசில காரியங்கள் வெற்றிபெறாமல் போகலாம். உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைப்பது அரிது. தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் மாற்றினத்தவர்களின் பங்கு அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினை நீடிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்தாலும் திருப்தி ஏற்படாது. எந்தக் காரியத்தையும் முன்கூட்டியே யாரிடமும்




சொல்லிவிட வேண்டாம். அதனால் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.

**ராகு சாரத்தில் கேது சஞ்சாரம்(26.9.2022 முதல் 3.6.2023 வரை)**

சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத் துணை வழியே கொஞ்சம் பிரச்சினைகள் ஏற்படலாம். விட்டுக் கொடுத்துச் செல்வதுதான் ஒரே வழி. வேலைப்பளு காரணமாக மனநிம்மதி குறையலாம். 'வீடு கட்டும் பணி பாதியில் நிற்கிறதே' என்று கவலைப்படுவீர்கள். கொடுக்கல் - வாங்கல்களில் பெரிய தொகையை கடனாக கொடுத்தால் யோசித்துக்கொடுப்பது நல்லது. ஆரோக்கியப்பாதிப்பிற்காகவும் செலவிடுவீர்கள். வாழ்க்கைத் துணை பார்த்த வேலை யில் மாற்றம் வரலாம். உறவினர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பணியில் மட்டுமே கவனமாக இருப்பது நல்லது.

**செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம்(4.6.2023 முதல் 7.10.2023 வரை)**

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரத்தில் பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்கள் தேடிவரும். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பிரச்சினையில் இருந்து விடுபடுவீர்கள். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். 'வெளி நாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா?' என்று யோசிப்பீர்கள். பெற்றோர்களின் அறிவுரையும், அனுபவம் உள்ளவர்களின் தொடர்பும் உங்களுக்கு புதிய ஆற்றலை வழங்கும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில், குரு பகவான் இரண்டு முறை பெயர்ச்சியாகிறார். அதன்படி வருகிற ஏப்ரல் 13- ஆம் திகதி மீன இராசிக்கு குரு பெயர்ச்சியாகி, உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். எனவே சுபச்செய்திகள் வந்து சேரும். குடும்ப முன்னேற்றம் கூடும். எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். அடுத்ததாக 22.4.2023 அன்று மேஷ ராசிக்கு குரு பெயர்கிறார். அங்கிருந்து உங்கள் இராசியைப் பார்க்கிறார். இதனால் தொட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றிபெறும். துணையாக இருக்கும் நண்பர்கள் தோள் கொடுத்து உதவுவர். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். உடல் ஆரோக்கியம் சீராகும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

16.3.2023 அன்று, கும்ப ராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசிக்கு 5-ம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு சனி வருகிறார். கும்பம் அவருக்கு சொந்த வீடு. எனவே பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு என்ன கிடைக்க வேண்டுமோ, அவை அனைத்தும் கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பூர்வீக சொத்துத் தகராறு அகலும். புதிய பாதை புலப்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அனுகூலத்தோடு அனைத்துச் செயல்களும் வெற்றிகரமாக முடியும். நாடு மாற்றங்கள், வீடு மாற்றங்களை எதிர்பார்ப்பவர்களுக்கு அது நிறைவேறும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு - கேது பெயர்ச்சி, உங்களுக்கு விரயத்தைக் கொடுத்து மன நிம்மதியைக் குறைக்கலாம். குடியிருக்கும் வீட்டையே, ஒரு சிலர் விலைக்கு வாங்கும் யோகம் உண்டு. மேஷ குருவின் சஞ்சாரத்திற்குப் பிறகு மிகச் சிறந்த பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கா விட்டாலும், கிடைத்த இடம் திருப்தி தருவதாக அமையும். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்பட , விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். இராகு-கேதுவிற்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரம் செய்வதும் மேன்மை தரும். **(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### வீண் ஆசை ஏன்?

திருரில் ஒரு சங்கீத வித்துவான் கூட இல்லாவிட்டாலும் அவ்வூரிலுள்ள சஞ்சீவியின் கடையில் வீணை செய்யப்பட்டு விற்கப் பட்டது.

அவன் அதனை நன்கு செய்து கொடுத்து வந்ததால் அவனது பெயர் பல ஊர்களில் பரவி இருந்தது.

சஞ்சீவி கிழவனாகிவிடவே தன் மகன் ராமப்பாவையும் தன் தொழிலில் பழக்கித் தன் கடையை பார்த்துக் கொள்ளச் செய்தான். திருருக்கு அருகே உள்ள மலையில் நல்ல உயர்ரக மரங்கள் இருந்ததால் அவற்றைக் கொண்டு செய்யப்பட்ட வீணைகள் உயர்தரமாக அமைந்தன. ராமப்பா அவ்வப்போது ஆட்களை அழைத்துப் போய் அம்மலையிலுள்ள நல்ல மரங்களைத் தேர்ந்தெடுத்து அறுக்கச் சொல்லி அவற்றை எடுத்து வந்து வீணைகள் செய்து வந்தான்.

திருர் வீணைகளைப் பற்றி அந்நாட்டு இளவரசி கேள்விப்பட்டாள். எனவே அவள் ஒரு ஆளைத் திருருக்கு அனுப்பி ஒரு வீணை வாங்கி வரச் சொன்னாள். அந்த ஆளும் ராமப்பாவிடம் இளவரசி சந்திரிகாவின் விருப்பத்தை ராமப்பாவிடம் கூறினான். ராமப்பாவும்" தற்போது ஒரு வீணை கூட இல்லை. ஆனால் ஒரு வாரத்தில் வீணை தயார் செய்து நானே எடுத்து வந்து இளவரசியிடம் கொடுக்கிறேன்" என்று கூறி அந்த ஆளை அனுப்பினான்.

மறுநாள் காலை ராமப்பா ஒரு ஆளை அழைத்துக் கொண்டு மலைக்குப் போனான். அங்கு அவன் பல மரங்களைப் பார்த்துவிட்டு முடிவில் ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்து அதை வெட்டும்படி தன் ஆளிடம் கூறினான். அந்த ஆளும் அந்த மரத்தை வெட்டத் தன் கோடரியை எடுத்து ஓங்கினான்.

அப்போது ஒரு குரல் "நிறுத்து, நான் வசிக்கும் இடத்தை அழிக்காதே" என்றது. அது ஒரு பெண்ணின் குரலாக இருக்கவே ராமப்பா சுற்றிலும் பார்த்தான்.

அப்போது அவன் முன் ஒரு யட்சிணி வந்து நின்றாள். ராமப்பாவும் அவனோடு வந்த ஆளும் நடுங்கினார்கள்.

அப்போது யட்சிணி "நீ ஏன் இதை வெட்ட விரும்பிகிறாய்?" என்று கேட்டாள். அவள் கோபப்படாமல் பேசியது கண்டு ராமப்பா சற்று நுணிவு கொண்டு நான் இந்நாட்டு இளவரசிக்கு ஒரு வீணை செய்து கொடுக்க வேண்டும்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




வழியில் தவசிகள் அவர்களை வரவேற்றனர்; தம் தவப்பள்ளிக்கு அழைத்துச் சென்றனர்; அரும் புனலில் நீராடித் தீயை ஓம்பிப் பின் அமுது உண்ணும்படி வேண்டினர்.

சீதையின் கரம் பற்றி இராமன் கங்கையில் நீராடினான். அவள் இடையழக்குத் தோற்று வஞ்சிக் கொடி நீரில் முழுகியது. அன்னம் நடைக்குத் தோற்று ஒதுங்கியது. கயல் கண்ணுக்குத் தோற்றது; நீரில் பிறழ்ந்து ஒளிந்தது. கூந்தலின் நறுமணம் கங்கையை வெறிகொளச் செய்தது; அலைகளில் நுரை பொங்கியதால் கங்கை மூத்துவிட்டது போல் நரை பெற்றது; இது வரை தன்னில் நீராடுபவர்களைப் புனிதப் படுத்தியது; சீதை நீராடியதால் அது புனிதம் அடைந்தது.

நீராடிய பின் நியதிப்படி நிமலனை வணங்கி வேள்விக் கடன்கள் செய்து முடித்தனர்; பின் அம் முனிவர் இட்ட உணவை ஏற்றனர்; "அமுதினும் இனியது" என அதனைப் பாராட்டினர்.

### குகன் வருகை

அங்கே அவர்கள் இருக்கும் இடம் தேடித் தறுக்கு மிக்க வேடுவர் தலைவன் குகன் வில்லேந்தியவனாய் வந்து சேர்ந்தான்; அவன் கல்லினும் வலிய தோளினன். படகுகள் ஆயிரத்துக்கு அவன் நாயகன்; கரிய நிறத்தினன்; யானைக் கூட்டம் போன்ற அரிய சுற்றத்தினன்; சீற்றமின்றியும் தீயெழ நோக்கும் விழியினன்; கூற்றுவனும் அஞ்சும் குரலினன்; சிருங்கிபேரம் என்னும் நகர் மருங்கு வாழ்ந்து வருபவன், தேனும் மீனும் ஏந்தி, மானவன் ஆகிய இராமனைக் காண வந்தான்; அவன் தங்கியிருந்த தவப்பள்ளியின் வாயிலை அடைந்தான்.

"இறைவா! நின் கழல் சேவிக்க வந்தனன்" என்றான். இலக்குவன் அவனை மேலும் விசாரித்தான்.மீனும் தேனும் இராமன் உண்டு பழக்கம் இல்லை; எனினும், அன்பன் கொண்டு வந்து அளித்தவை ஆதலின் அவற்றை வேண்டா என்று மறுக்கவில்லை. "அன்புடன் படைத்தது; தின்பதற்கு இனியது" என்று கூறி ஏற்றுக் கொண்டான் "அமுதினும் இனியது" என்று பாராட்டினான்; "இதை யாம் ஏற்றுக்கொண்டோம்; அதுவே உண்டதற்குச் சமம்; நீர் மனநிறைவு கொள்ளலாம்" என்று கூறி அவற்றை அவர்களிடமே திருப்பித் தந்தான்; கண்ணப்பன் ஒப்பதோர் அன்பினை அவ் வேடன்பால் கண்டான்; காளத்தி வேடனாகக் கங்கை வேடனைக் கருதினான்.

"உன்னை இந்நிலையில் பார்த்த கண்ணைப் பிடுங்கி எறியாமல் இருக்கின்றேனே" என்று கூறி அங்கலாய்த்தான் குகன். அவன் ஆழ்ந்த அன்பு இராமனைக் கவர்ந்துவிட்டது. "யாதினும் இனிய நண்பனே என்னோடு இருப்பாயாக!" என்று குழைந்து அவனை ஏற்றுக் கொண்டான். குகன் தன் சேனையைச் சுற்றியும் காவல் செய்யுமாறு செய்து, தானும் உறங்காமல் கழுகு போல் சுற்றி வந்து காவல் செய்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்.
– *திருமந்திரம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாரதத்தின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் அடையாளமாகட்டும்

இந்தியா ஞான பூமி. இலங்கை சிவபூமி இதுவே உண்மை வரலாறு.

எனினும் சமகால நிலைமை எமது வரலாற்றை மாற்றியமைத்து நிற்கிறது.

வரலாறுகள் சிதைக்கப்படும்போது அது மனித வாழ்வின் கட்டமைப்பையும் சிதைத்து விடும் என்பதுதான் உண்மை.

ஆம், இலங்கையின் ஆதிக்குடிகளான நம் தமிழினம் இன்று அடக்கப்பட்டுக் கிடக் கிறது.

இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் ஆண்ட சிவபூமி இன்று தன்னிலை இழந்து தவிக்கிறது.

இந்நிலையில் ஈழத் தமிழர்களின் ஒரே நம்பிக்கை எங்கள் பாரத பூமியாகிய இந்தியா என்பதை இவ்விடத்தில் சுஹித்தானாக வேண்டும்.

இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை இன்னமும் ஈழத் தமிழர்களின் இதயங்களில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இதுபற்றி இந்திய தேசம் அறிந்திருப்பது என்னவோ நாம் அறியோம்.

ஆனால், இந்தியாவைவிட ஈழத் தமிழர்களின் உற்ற உறவு வேறில்லை என்பதுதான் நம் ஈழத் தமிழ் மக்களின் அறுதியான முடிவு.

இந்த நம்பிக்கைகள் வீண்போகாதெனும் அளவில், இந்தியாவின் கருமங்கள் இருக்க வேண்டும் என்பது இறைவனை நோக்கிய நம் பிரார்த்தனை என்பதோடு இன்று பங் குனித் திங்கள் 14ஆம் நாள் (28.03.2022) இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்குமிடையிலான உறவை வலுப்படுத்துகின்ற வரலாற்றுப் பதிவுக்குரிய நாள்.

ஆம், தமிழ் மக்களுக்காக இந்திய தேசத்தின் நிதி உதவி மூலம் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படுகின்ற நாள்.

யாழ்ப்பாணம் பொதுநூலகம், யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம் மாநகர சபை, சுவட்டுறவு பெரியார் வீரசிங்கம் அவர்களின் ஞாபகார்த்த மண்டபம், இந்திய தேசபிதா மகாத்மா காந்தியடிகள் வந்திறங்கிய புண்ணிய சேத்திரம் என்ற பன்மைத்துவப் பெருமைக்குரிய இடத்தில் அமையப்பெற்ற யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் இன்று திறந்து வைப்பதனூடு இந்தியா மீதான ஈழத் தமிழ் மக்களின் நம்பிக்கை இன்னும் வலிமை பெறுகிறது.

ஆம், இந்தியா அமைத்துத் தந்த பண்பாட்டு மையம் பயனுறுதிமிக்கதாக அமைய வேண்டுமாயின் ஈழத் தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும்.

ஈழத் தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையின் அடையாளமாக இந்திய தேசம் எம் மக்களுக்காக அமைத்துத் தந்த யாழ்ப்பாணப் பண்பாட்டு மையம் அமையட்டும்.

அதோ! யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கின் தோற்றம் மனக்கண் தெரிகிறது.

ஆடும் நடராஜப் பெருமானின் திருப்பெரு வடிவம், திறந்த வெளியரங்கின் முகப்பில் காட்சி தருகிறது.

அந்த நினைவுகளோடு யாழ்ப்பாணப் பண்பாட்டு மையத்தின் தோற்றத்தைப் பார்க்கவும் ரசிக்கவும் பயன்பெறவும் தமிழ் மக்கள் வேணவாக் கொண்டுள்ளனர் பாரத தேசத்துக்கு நன்றி தெரிவிக்கும் இதயத்தோடு.

### புத்தூர் மேற்கு நவக்கிரியில்

## இனந்தெரியாத நபர்களால் இளைஞன் ஒருவர் கடத்தல்

புத்தூர் மேற்கு, நவக்கிரியில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று உறவினர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் மேற்கு, நவக்கிரியைச் சேர்ந்த அருந்தவராசா சயந்தன் என்ற 30 வயது இளைஞனே நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வீட்டு வளாகத்தில் இருந்து எவரோ பாய்ந்து வெளியே செல்வதை அவதானித்த இளைஞன் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார் என்றும் வெளியே சென்ற இளைஞனை வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவர் துரத்திச் சென்றனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் தேடிய போது அவரது கைபேசி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த 12ஆம் திகதி இளைஞனின் வீட்டுக்கு வந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் வெட்டுக்காயத்துக்கு உள்ளான இளைஞனின் தந்தை தற்போதும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை 29 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ் பிரதேசத்தில்** நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர்வழங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணைசந்தி, சுருவில்-ஊர்காவற்றுறை, கடற்கரை பகுதி-மணற்காடு, குடத்தனை நீர்வழங்கல், வலிகண்டி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** நெளுங்குளம் நீர் வழங்கல் சபை, அறுகம் புல்வெளி, பாரதிபுரம், கூமாங்குளம், நாகரிலுப்பைக்குளம், நெளுங்குளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பாண்சின்னகுளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திர குளம், சாம்பல் தோட்டம் வீட்டுத்திட்டம், விநாயகபுரம் வீட்டுத் திட்டம் ஆகிய பிர தேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## நாட்டில் இன்றைய தினமும் மின்வெட்டு அமுலாகும்

(கொழும்பு)

நாட்டில் இன்றைய தினமும் மின் துண்டிப்பை மேற்கொள்வது தொடர்பில் மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, A,B,C, D,E,F,G,H,I,J,K,L ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு இன்று காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப் பகுதியினுள் ஒரு மணித்தியாலமும் 40 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அவ்வாறே P,Q,R,S, T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரையான காலப்பகுதியினுள் 2 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும், மாலை 5.30 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப் பகுதியினுள் ஒரு மணித்தியாலமும் 50 நிமிடங்களும் மின்வெட்டினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

### மண்ணெண்ணெய் வழங்குவதில் சிக்கல்

## எரிபொருள் நிலைய ஊழியர் - பொதுமக்கள் இடையே முரண்பாடு

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிலையத்தில் பொதுமக்களுக்கும் எரிபொருள் நிலையத்தின் ஊழியருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிலையத்திற்கு நேற்று காலை 6,600 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் 13,200 லீற்றர் டீசல் தாங்கிய பவுசர் ஒன்று வருகை தந்திருந்தது. வாகனங்களுக்கு டீசல் முழுமையாக நிரப்படுவதுடன் ஒரு நபருக்கு 1000 ரூபாவிற்கு என்ற அடிப்படையில் கலன்களில் மண்ணெண்ணெய் வழங்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்த சமயத்தில் இடையில் வந்தவர்களுக்கு எரிபொருள் நிலைய ஊழியர் மண்ணெண்ணெய் வழங்கியதாக தெரிவித்து வரிசையில் நின்ற மக்கள் எரிபொருள் நிலைய ஊழியருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் வாய்த்தர்க்கம் நீடித்தது.

இதனையடுத்து அவ்விடத்திற்கு வருகை தந்த எரிபொருள் நிலையத்தின் முகாமையாளர், இடையில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படும் நபரை வெளியேற்றியமையினையடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (ம-250)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### தவம்



தவம் என்னும் யோகமானது மனித வாழ்வுக்கு இன்றியமையாத வாழ்க்கை நெறி. இதன் மதிப்புணர்ந்து பெரியோர்கள் தங்கள் வாழ் நாளை அர்ப்பணம் செய்து மனித குலத்துக்கென உருவாக்கி போற்றிக் காத்துத் தேவையும், தகுதியும் உள்ளவர்க்கு உதவச் செய்தனர். தற்காலத்தில் வாணிப நோக்கமுள்ள பலரால் யோகத்தின் கருத்தும், செயல் முறைகளும், விளைவுகலும் திரித்துக் கூறப்படுகின்றன் பரவலாகப் போதிக்கப்பட்டும் வருகின்றன.

மாயாஜாலங்களைப் புரிந்து மக்களை மயக்கவல்ல அற்புத ஆற்றல்களை அளிக்கும் பயிற்சி முறையே யோகம் என்றும், தனி மனிதன் பெருமையையும், புகழையும் உயர்த்தும் ஒரு சாதனைதான் யோகம் என்றும் பொதுமக்கள் கருத்துக் கொள்ளுமாறு யோகத்துக்குப் பொருள் கூறப்படுகின்றது.

பல இடங்களில் யோகமென்னும் தவத்திற்கு உண்மை விளக்கம் கூறி வருகின்றேன். அறிவாளிகள், சிந்தனையாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். உண்மை உணர்ந்த தெளிவிலே மனநிறைவு பெறுகின்றனர்.

மனதை உயிர்மேல் வைத்துப் பழகும் தியானமோ, அசைவற்று, நினைவற்றிருக்கும் சாதனையோ, பல கோணங்களில் செய்யும் உடற்பயிற்சியோ, தற்சோதனையோ, மாத்திரம் தவம் அல்ல. மனிதப் பிறவியின் பெருநோக்கமும், மதிப்பும் உணர்ந்து அறிவின் நிலை அறிந்து பேரறிவு நிலை எய்தி, புலன்களை ஒழுங்குபடுத்தி ஒழுக்கம், கடமை, ஈகை என்னும் அறநெறிகளை தனதியல்பாகக் கொண்டு, அயரா விழிப்பு நிலையோடு தானும் வாழ்ந்து, பிறரையும் இனிதாக வாழ வைக்கும் உயர்வாழ்வே தவம் ஆகும்.

இத்தகைய பண்பாட்டுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளும் பயிற்சி முறைகளே தியானம், தற்சோதனை, உடற்பயிற்சி, அறநெறி விளங்கிக் கொள்ளும் போதனை, வேதாந்த விளக்கங்கள் இவையாவுமாகும். இவை எல்லாம் வழிகளே. முழுமை அறிவை அறிந்த பேரற வாழ்வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 29

காலி மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012

| பிரதேசச்செயலகம் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|
| பெந்தொட்டை | 116 | 1128 |
| பலபிட்டிய | 115 | 1106 |
| கரந்தெனிய | 293 | 563 |
| எல்பிடி | 1819 | 2 |
| நியாகம | 359 | 3 |
| தவலம | 2051 | 5 |
| நெலுவ | 1523 | 12 |
| நாகொடை | 4321 | 9 |
| பத்தேகம | 2231 | 6 |
| வெலிவிட்டிய-திவிதுர | 1220 | 5 |
| அம்பலாங்கொடை | 156 | 11 |
| கோணப்பினுவல | 39 | 4 |
| ஹிக்கடுவை | 396 | 50 |
| காலியும் சூழலும் | 1036 | 32611 |
| போபே- பொத்தல | 548 | 1465 |
| அக்மீமன | 805 | 1777 |
| யக்கலமுல்ல | 2955 | 9 |
| இமதூவ | 41 | 6 |
| ஹபராதூவ | 75 | 18 |
| மொத்தம் | 20099 | 38790 |

## காலி மாவட்டத்தின் மாகாணசபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாணசபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் , தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திற்கு 22 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி காலிமாவட்டம் 11 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாணசபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் , தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திற்கு 22 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப் பட்டனர். இதன்படி காலிமாவட்டம் 11 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

காலி மாவட்டத்தில் 19பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 895 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,063,334 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனதொகை 96,667 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**காலி மாவட்டத்தில் 19 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 895 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,063,334 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு**

**உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 96,667 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

காலி மாவட்ட செயலகத்தில் 07.12.2017 மாலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 12 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்பிக்கும் படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 9 பிரேரணைகள் அடங்களாக மொத்தம் 21 சமர்ப்பிப்புகளில் 22 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது

அதிகளவான பிரேரணைகளில் பரிந்துரைக்கப்பட்டிருந்ததாவது, தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு அல்லது பிரதேச செயலகப் பகுதிகளின் ஒருங்கிணைப்பு, உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும், பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே ஆகும்.

குழுவினால் இதுபோன்ற சில பிரேரணைகளை கருத்தில் ஏற்க முடியவில்லை. ஏனெனில் சில பிரேரணைகளில் தேர்தல் தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகை கனிசமாக சமமற்ற நிலையில் உள்ளது. மற்றும் 2017 ஆம் திருத்தச் rl|k;gFj pB (A) (4) (b) இன் நோக்கத் திற்கேற்ப அமையாததாலும், மேலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும், இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் ஏற்க முடியவில்லை.

அதுமட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன.அதாவது, கிராம அலுவலர் பிரிவுத்தகவல், பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைக் கூறுபோடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது.

மற்றும் தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரி சனத்தொகையின் விலகலின் வரம்புகளுக்குட்பட்டதாகவும், 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டுள்ளது.

மக்களின் பல பிரேரணைகள் பரிந்துரைத்தது காலி நகரத்துக்கு பல் அங்கத்தவர் கொண்ட தேர்தல் தொகுதி ஒன்றை உருவாக்குவதையே ஆகும். ஏனெனில் சிறுபான்மையின் சமூக விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்வதற்காகவே, ஆனால் குழு அவதானித்ததாவது முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் 3.7% என்பதே ஆகும். அது ஒரு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிக்குத் தேவையான சனத்தொகையில் 25% தை விட குறைவானதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அந்த சமூகத்தின் சனத்தொகை குறைவாக உள்ளதால் ஒரு பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதியில் சிறுபான்மையின் பிரதிநிதி ஒருவர் தெரிவுசெய்யப்படுவது சாத்தியமற்றது என்பதை குழுஅடையாளம் கண்டுகொண்டது. அதற்குப் பதிலாக முஸ்லிம் சமூகத்தை ஒரு தேர்தல் தொகுதிக்குள் ஒன்று திரட்டி இந்தப் பிரேரணைகளை முடிந்த அளவு அவர்களின் சமூக விருப்பங்களை நிறைவு செய்யும் வகையிலும், அத்துடன் அனைத்து இனத்தவர்களினதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கின்ற வகையிலும் எல்லைகள் நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு பிரேரணையில் காலி நகரத்தின் தேர்தல் தொகுதிக்கு முஸ்லிம் சிறுபான்மையின் செறிவை அதிகரித்து கொள்வதற்காக குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளை காலி நகர தேர்தல் தொகுதிடுடன் சேர்துக்கொள்ளும்படி பரிந்துரை செய்யப்பட்டு இருந்தது.

குழுவானது முடியுமான வகையில் குறிப்பிட்ட அத்தொகுதியில் அவர்களின் சமூக விருப்பங்களை நிறைவுசெய்யும் வகையில் எல்லை நிர்ணயம் செய்தது.

பெற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளில் 03 சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, 02 சமர்ப்பிப்புக்ள் எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை, ஒரு பிரேரனை உள்ளூர் அதிகாரசபை பிரதேசத்தைப் பற்றி கூறப்பட்டிருந்தது அது குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும் போது, சரித்திர பிரசித்திபெற்ற பெயர் இடப்படவேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத்தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது. தீர்மானிக்கப்பட்ட அனேகமான தொகுதிகளின் பெயர்கள் பெறப்பட்ட ஒரு பிரேரணைக்கு ஒத்துப்போகிறது

சுருக்கமாகக் கூறினால் 10 பிரதேச செயலகங்கள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 7 பிரதேச செயலகப் பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 2 பிரதேசப் செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் தொகுதிக்கான சராசரி மக்கள் தொகைக்கு −5.0% மற்றும் + 7.9% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து காலி மாவட்டம் 11 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப் பட்டுள்ளது.

(தொடரும்...)

## பொலிஸ்...

காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் கோண்டாவில் வீட்டினுள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 10 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்று புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டிற்கு அருகில் இடம்பெற்ற மரணச் சடங்கில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இரண்டு குழுக்களுக்கு இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டு அது மோதலாக மாறியுள்ளது.

அதன் பின்னணியில் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டினுள் புகுந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன் வீட்டில் இருந்த பொருட்களையும் அடித்து உடைத்து சேதமாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-33)

## யாழ்ப்பாணப்...

பிரதமர் மகிந்த ராஜபக்சவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் இன்று திறந்துவைப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து காணொளி மூலம் திறப்புவிழா நிகழ்வு மதியம் 12 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண கலாசார நிலையம் என்று முன்னர் பெயர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள மொழி ஆர்வலர்கள் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஊடாக யாழ்ப்பாணப் பண்பாட்டு மையம் என்ற பெயரை பயன்படுத்துமாறு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய யாழ்ப்பாணப் பண்பாட்டு மையம் என்ற பெயர் நடைமுறைக்கு வந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இந்தியப் பிரதமர் மோடி இணைய வழியூடாக யாழ்ப்பாணப் பண்பாட்டு மையத்தை திறந்து வைப்பார் என முன்னர் தகவல் வெளியாகி இருந்தபோதிலும் இது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ம-18,33)

## அரசு...

களை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது வருங்காலத்திலே வடக்கு, கிழக்கு மக்களின் நிலை எவ்வாறு இருக்கப் போகின்றது என்ற பயம் பீடித்திருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்களுக்குள் ஒரு பொதுவான கருத்து இருக்கின்றது. வடக்கு, கிழக்கு மக்கள் வேற்றுமைப்படக்கூடாது. தங்களுக்குள் ஒருமித்து செயலாற்ற வேண்டும்.

நாங்கள் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் என்ற ரீதியில் எங்களுக்குள் அந்நியோன்யம் வரவேண்டும் என்ற வகையில் வட மாகாண மக்களுக்கு அவ்வாறான செயன்முறைகளைச் செயற்படுத்தி வருகின்றோம்.

தற்போது அரசாங்கம் செல்லும் நிலையைப் பார்த்தால் வெகுவிரைவிலே வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அடையாளம் இல்லாமல் போய்விடும்.

பல இடங்களிலும் அந்த அடையாளங்களை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பௌத்த வணக்கஸ்தலங்கள், எமக்கு அனுப்பப்படும் கடிதங்கள் சிங்கள மொழியில் மாத்திரம் அனுப்பப்படுதல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டிருத்தல் இவற்றையெல்லாம் பார்க்கும்போது வருங்காலத்திலே வடக்கு, கிழக்கு மக்களின் நிலை எவ்வாறு இருக்கப்போகின்றது என்ற பயம் பீடித்திருக்கின்றது என்றார். (ம)

## இலங்கை...

வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிற்பகல் அவரை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக அதன் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் நாளைய தினம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதிகளும் இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (ம)

## அரசிலிருந்து...

அநுரபிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, நிமல் லான்சா, பிரேம்நாத் தொலவத்த, சந்திம வீரக்கொடி உட்பட 10 ஆளுங்கட்சி உறுப்பினர்களே இந்த முடிவை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திம வீரக்கொடி அரசைக் கடுமையாக விமர்சித்து வருகின்றார். அதிருப்தி காரணமான நிமல் லான்சா அண்மையில் இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகினார்.

சுசில் பிரேமஜயந்த அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழர்களின்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"சம்பந்தன் சிறந்த மூத்த அரசியல்வாதி. அவர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஆரம்பித்துள்ள பேச்சை உள்நாட்டில் உள்ளவர்களும் வெளிநாட்டுத் தூதுவர்களும் வரவேற்றுள்ளனர்.

அரசியல் தீர்வு உள்ளிட்ட 5 விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியும் கூட்டமைப்பினரும் திறந்த மனதுடன் பேச்சை ஆரம்பித்துள்ளனர். இது ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கும் எதிரணியினருக்குப் பேரிடியாக அமைந்துள்ளது.

கூட்டமைப்பினருடனான சமரசப் பேச்சை ஜனாதிபதி தொடர்ந்து முன்னெடுப்பார். இந்தப் பேச்சுகள் மூலம் தமிழ் மக்களின் மனதை ஜனாதிபதி வெல்வார்.

சஜித் அணியினர் என்னதான் திட்டங்கள் வகுத்தாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அடுத்த தடவையும் கோட்டாபய ராஜபக்சவே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்"என்றார். (ம)

## அரசாங்கத்தை...

ளது.

சில எதிரணிகள், சிவில் அமைப்புகள் மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே இதற்கான வியூகத்தை அவர் வகுத்துவருகின்றார் எனவும், இரகசிய பேச்சுகள் கூட இடம்பெற்றுவருவதாகவும் தெரியவருகின்றது.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள அரசியல் பின்புலம் கொண்ட ஒருவரையே சந்திரிகா அம்மையார் இலக்கு வைத்துள்ளார் எனவும் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெறும் வகையிலுமே அந்த நபரை சந்திரிகா, தெரிவுப் பட்டியலில் முன்னிலையில் வைத்துள்ளார் என அறியமுடிகின்றது. 2015 இல்நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு சந்திரிகா அம்மையாரே திரைமறைவில் காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருந்தார். (ம)

## ராஜ...

பட்ட விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் இதற்கு தலைமையேற்று செயற்பட்டு வருவதாகவும் இதற்கு முன்னணி தேரர் ஒருவரின் உதவியும் கிடைத்துள்ளதாகவும் மேலும் தெரியவந்துள்ளது.

பதவிகள் வழங்கப்படாமை, அபிவிருத்தி நடவடிக்கைகளில் சம்பந்தப்படுத்திக் கொள்ளாமை போன்ற காரணங்களின் அடிப்படையிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அதிருப்தியடைந்துள்ள அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தை இல்லாமல் ஆக்கப்போவதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ அண்மையில் கண்டியில் வைத்து ஊடகங்களிடம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மின்சாரப்...

இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம், வார இறுதியில் மின்சாரப் பாவனை அதிகரித்ததாகத் தெரிவித்து, மேலதிகமாக ஒரு மணித்தியால மின் துண்டிப்பு நேற்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. (ம)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1229
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 3 8 6 3 6 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1067
J 22 05 41 49 75

மஹஜன சம்பத
திகதி 2022/03/27
சீட்டிழுப்பு இலக்கம் 4719
Y 4 8 5 3 1 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.03.27
சீட்டிழுப்பு இலக்கம் - 749
S 03 30 34 55
வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1522
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.03.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,070,600/-
வெற்றி இலக்கங்கள் 26 61 66 71 V

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.27
சீட்டிழுப்பு இல: 3857
வர்ணம்: இளஞ்சிவப்பு
ரூ. 3,791,860/-
வெற்றி இலக்கங்கள் 09 32 56 75 T

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1696
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 27.03.2022
தினம் ஞாயிறு
B 06 07 10 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 54,856,977/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 152
சீட்டிழுப்பு திகதி 2022.03.27 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 40 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,254,580/-

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,236,094/-
வெற்றி இலக்கங்கள் 11 14 42 59 மிதுனம்
திகதி 27.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3408
வர்ணம் ஊதா
7 3 6 1 4 8 5
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,638,580/-

12
P 38 20 44 54 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 226,374,463/-
சீட்டிழுப்பு வாரம் 872
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.03.27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிட்: 5 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 5 கோவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப் படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,459 ஆக அதிகரித்துள்ளது. (ம)


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## அறிவித்தல்

எமது நிறுவனமாகிய "Advanced Technology System" 2019 ஆம் ஆண்டு முதல் 2022.02.28 வரை திருத்தம் செய்வதற்கு வழங்கிய உபகரணங்களை இதுவரை மீள பெற்று கொள்ளாதவர்கள் எதிர்வரும் சித்திரை மாதம் 02 ஆம் (02.04.2022) திகதிக்கு முன்னர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளவும். குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் மீள பெற்றுக் கொள்ளாத பொருட்களுக்கு எமது நிறுவனம் பொறுப்பு ஏற்காது.

நன்றி

நிறுவன உரிமையாளர் (10802)

021 221 9330, 076 781 7831

## மணமகள் தேவை

1967இல் பிறந்த பிரான்ஸ் நாட்டுப் பிரஜாவுரிமையுள்ள திருமணமாகாத நற்பண்புள்ள குருகுல மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. நட்சத்திரம் - கேட்டை 4ம் பாதம் செவ்வாய்/கேது 12இல், லக்கினத்தில் சந்திரன், சனி 5இல் சூரியன், புதன், வியாழன் 9இல், மணமகன் இலங்கை வந்து மணமகளை அழைத்துச் செல்வார். தாரமிழந்தவர்களும் கருத்தில் கொள்ளப்படுவர். (ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு தொலைபேசி இலக்கம் தவறுதலாக என்னால் தரப்பட்டமைக்கு மனம் வருந்துகின்றேன்.) (10800)

தொடர்பு-075 253 0305 சகோதரன்

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் கோவிலுக்கும் கச்சேரியடிக்கும் இடைப்பட்ட இரண்டு கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்திற்குள் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை

077 546 5577 (C-4071)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10768)

076 825 7716 (ஆகாஸ்)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி

தொ.பே:- 076 443 1576 (C-4065)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4072)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு வாகன ஓட்டுனரும் (Light Vehicle) விற்பனை பிரதிநிதியும் (A/L, முன்அனுபவம்) தேவை.
(யாழ். நகரில் இருந்து 5 km இற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.)

077 267 4194
077 604 3681 (10779)

## Rani Farm

Reg:-VW/FIN/BR/1/22/2018
Pannagam, chulipuram, Jaffna.
0773322433

| | |
|---|---|
| 1 நாள் ஊர்க்கோழி குஞ்சு | - 100/= |
| 2 கிழமை ஊர்க்கோழி குஞ்சு | - 160/= |
| 1 நாள் வான்கோழி குஞ்சு | - 350/= |
| 1 நாள் வெள்ளடியன் குஞ்சு | - 300/= |
| காடை குஞ்சு | - 35/= |

ஒப்பந்த அடிப்படையில் 1 மாத குஞ்சுகள் வளர்த்து தரப்படும். (10752)

077 332 2433
பண்ணாகம்

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில்
**120** பரப்புக் காணி
விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து 50 m நடைதூரம்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 460 தென்னைகள் உள்ளன.




தரகர் தேவையில்லை

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை
ரூ.450,000

(10811)

தொடர்பு:-
ஜெயம் - 077 814 7389, 077 241 7589, 077 805 1655


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org